2012 மே 16]

274—

மாணவியர் விடுதி கட்டுதல்

வினா எண் 462—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, மஞ்சவாடி, கல்லாத்துப்பட்டி பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் மாணவியர்கள் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முகம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, மஞ்சவாடி, கல்லாத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

275—

பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இணைத்தல்

வினா எண் 651—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளர், மறவர், அகமுடையோரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளர், மறவர் மற்றும் அகமுடையோர் வகுப்பினர் இனி தேவர் என்று அழைக்கப்படுவர் என்று அரசாணை (நிலை) எண் 38, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 1-3-95-இல் ஆணைப் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட வகுப்புகளையும் அதன் உட்பிரிவுகளையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து, பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை வழங்குமாறு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டு, அப்பொருள் ஆணையத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. மேற்குறிப்பிட்ட பொருள் மீதான ஆணையத்தின் பரிந்துரை கிடைத்த பின்னரே அரசு பரிசீலித்து முடிவு எடுக்க இயலும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.